| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மாது | நாள் | 08.04.2021 |
| தகப்பனார் பெயர் | செங்கோடன் | | |

2, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எம்.காம் படித்துள்ளேன். நான் நிர்மலா மேனிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். என்னுடைய அப்பா, சித்தப்பா ஆகியோர் வழக்கு தாக்கல் செய்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வழக்கு சம்மந்தமாக என்னுடைய தகப்பனாருடன் வந்து கொண்டுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் சாட்சியம் அளித்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வழக்கு சொத்துவிபரத்தில் புதிய சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். அப்போது தெரியவில்லை. ஆகவே பத்திரத்தில் உள்ள சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளோம். இந்த வழக்கை என்னுடைய தகப்பனார் 2010-ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். கடந்த 11 ஆண்டுகளாக வழக்கை திருத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பட்டாவில் மோசடி செய்துள்ளார்கள். ஆகவே பழைய பத்திரத்தின் அடிப்படையில் எங்களுக்கு உரிமையுள்ளதால் அதே சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளோம். 2ம் பிரதிவாதி உட்பட மற்ற பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சர்வே எண்கள் உடைக்கப்பட்டு பல்வேறு விஸ்தீரணங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். 2 ஏக்கர் 20 சென்டை என்னுடைய தகப்பனார் என்னுடைய சித்தப்பா இளையப்பனிடமிருந்து கிரையம் வாங்கினார். 1973ல் வாங்கினார். வா.சா.ஆ.2 தான் என்னுடைய தகப்பனார் செங்கோடகவுண்டர் இளையப்பனிடமிருந்து வாங்கினார் என்றால் ஆமாம். எவ்வளவு வாங்கினார் என்றால் 2 ஏக்கர் 20 சென்ட் வாங்கினார். வா.சா.ஆ.2-ல் 2 ஏக்கர் 20 சென்டிற்கு செக்குபந்தி இல்லை என்றால் ஆமாம். 6 ஏக்கர் 60 சென்டிற்கு தான் செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி 6 ஏக்கர் 60 சென்டில் பொதுவில் 1/3 பாகம் என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்த 2010வரை அந்த வா.சா.ஆ.2-ல் கண்டுள்ள சொத்துக்களை அளக்கவில்லை என்றால் 2000-ம் வருடத்தில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம். அதற்காக அளவையர் வந்து அளந்து பார்த்தார். 2000-ம்

கால கட்டத்தில் சர்வே எண்.140 என்பது வருவாய்த்துறை ஆவணங்களில் இல்லை என்றால் ஆமாம். ஆகவே 2000–ம் வருடத்தில் சர்வே எண்.140 நிலையில் இல்லை என்பது எனக்கும், என்னுடைய தகப்பனாருக்கும், குடும்பத்திற்கும் தெரியும் என்றால் ஆமாம். அதே 2000–ம் வருடத்தில் பி.வா.சா.ஆ.1–ன் மூலம் என்னுடைய தகப்பனார் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். அதில் சர்வே எண்.278/2 ஏ எனவும், 18 ஹெக்டேர் எனவும் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1–ல் கண்டுள்ள சொத்துக்கள் வழக்கு சொத்தில் ஒரு பகுதி என்றால் இல்லை. அதனுடைய சர்வே எண்.141. இளையப்பகவுண்டரிடம் வாங்கிய 2 ஏக்கர் 20 சென்ட் போக மீதியுள்ள சொத்துக்கள் மணி குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். மீதியுள்ள சொத்துக்களுக்கும், எங்களுடைய சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் ஆமாம். நில ஆர்ஜித நடவடிக்கைக்காக சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்க பி.வா.சா.ஆ.2 என்றால் ஆமாம். அந்த நீதிப்பேராணை மனு எண் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஆமாம். அந்த நில ஆர்ஜிதத்தில் மயானத்திற்காக எடுக்கப்பட்ட நிலத்திற்கு உண்டான தொகை தற்போது வரை நீதிமன்ற வைப்பீட்டில் உள்ளது என்றால் ஆமாம். அத்தாயம்மாளிடமிருந்து எங்களுக்கு வந்த 3 ஏக்கர் 30 சென்டில் பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை என்றால் அதில் தான் ஆள்மாறாட்டம் செய்து ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆள்மாறாட்டம் ஏற்படவில்லை என கூறி மாவட்ட பதிவாளர் தள்ளுபடி செய்துள்ளார் என்றால் ஆள்மாறாட்டம் செய்யப்பட்டது என குறிப்புரையில் கூறிவிட்டு தள்ளுபடி செய்துள்ளார். மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என கூறியுள்ளார். நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மணி பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் தவறு என கட்சி செய்துள்ளநிலையில் அதனை ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை என்றால் இனிமேல் தான் கோரவுள்ளோம். மணி தன்னுடைய ஆவணங்களை வைத்து இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.176/2011 தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் என்னுடைய தகப்பனாரும், சித்தப்பாவும் இடையூறு செய்யக்கூடாது நிரந்தர தடையுத்தரவு பெற்றுள்ளார் என்றால் ஆமாம். போலியான ஆவணங்களை வைத்து தீர்ப்பு பெற்றுள்ளார். போலியான ஆவணங்கள் என கூறியுள்ளநிலையில் அந்த

தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

2, 8 பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.